## வனாதவில்லு பிரதேச சபை

## புத்தளம் மாவட்டம்

1. **நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 09 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 30 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வனாதவில்லு பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) 2016 ஆம் ஆண்டிற்குரிய பெறவேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 413,075 நிதிக்கூற்றுக்களில் குறைத்து காணப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வாகன விபத்து காப்புறுதி மீளளிப்பு பெறுவனவு ரூபா 237,322 தொகை பொது வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

05 கணக்கு விடயங்களின் பயன்பாட்டு பதிவேடுகள் / பட்டோலைகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே ரூபா 362,508 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | | | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | | | |
| | (i) | 5(3) விதி | 2,113,010 | வருமானம் சேகரிப்பு தொடர்பாக உள்ளக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | விதி 5(7) | - | களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) | விதி 33 | 633,323 | வீதவரி மற்றும் ஏக்கர் வரிக் கொடுப்பனவு தவிர்ப்புச் செய்யும் நபர்கள் தொடர்பான பட்டியலொன்றும் ஆதனங்களை தடைசெய்யும் பிடியாணை ஒவ்வொரு காலாண்டின் போதும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) | விதி இலக்கம் 61 | - | கைத்தொழில்கள், வர்த்தக, வியாபார மற்றும் தொழில் துறைகள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (v) | விதி இலக்கம் 64 | - | கொடுப்பனவு தொடர்பாக உறுதிப்படுத்தலுக்காக கைத்தொழில் வரி பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட செலுத்தப்படாத விடயங்கள் தொடர்பாக ஒரு வாரம் விட்டு வாரம் முழுமையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| | (vi) | விதி இலக்கம் 217 மற்றும் 218 | 94,969,642 | சபைக்குச் சொந்தமான சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தம் கணிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 104 | | - | 2017 மார்ச் 13 மற்றும் செப்தம்பர் 09 ஆந் திகதிகளில் சபைக்குரிய மோட்டார் கேடரின் இடதுபக்க கண்ணாடிக்கு ஏற்பட்ட சேதம் அறிக்கையிடப்படாதிருந்ததுடன் பொறுப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | 915,286 | சபைக்கு சொந்தமான கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி செயலாற்றல்

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 374,808 ஆக காணப்பட்டதுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,810,047 ஆக காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | **2017** | | | | **2016** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| வீதவரி மற்றும் வரி | 805 | 814 | 881 | 933 | 818 | 582 | 352 | 1,000 |
| வாடகை | 32,927 | 2,153 | 2,026 | 1,484 | 33,770 | 25,169 | 1,824 | 1,357 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 325 | 199 | 199 | - | 236 | 199 | 199 | - |
| ஏனைய வருமானம் | 7,280 | 52,386 | 52,824 | 14,890 | 6,590 | 3,743 | 2,932 | 15,328 |

குறிப்பு * சேகரிக்கப்பட்ட வருமானத்தில் மீளாய்வாண்டிற்குரிய பட்டியலிடப்பட்ட வருமானத்தின் அறவீடுகள் மற்றும் முன்னைய ஆண்டுகளின் நிலுவை வருமானத்தின் அறவீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 55.1 மில்லியனில் ரூபா 42.4 மில்லியன் ஆண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அது 76 சதவீதத்திற்கு சமமாக இருந்தது. மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 17.6 மில்லியனான நிலுவை வருமானத்தில் ரூபா 13.4 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் மேலும் ரூபா 17.3 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் மீளாய்வாண்டிலும் மற்றும் முன்னைய வருடங்களிலும் மேற்கொள்ளப்பட்டிருந்த கட்டிட மேம்படுத்தல்களுக்கான தற்காலிக மதிப்பீடுகளை வழங்கி வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 18 வருடங்களுக்கு முன்னர் பெறப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதிகளின் அடிப்படையில் தொடர்ச்சியாக வீத வரி அறவிடல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) 03 வருடங்களைத் தாண்டியிருந்த ரூபா. 575,507 பெறுமதியான நிலுவை வீத வரியை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா. 292,781 ஆகவிருந்த நிலுவை வரியில் ரூபா. 115,026 ஒரு வருடத்திற்கும் மேலாக அறவிடப்படாமல் இருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா. 1,079,356 ஆக இருந்த நிலுவை கடை வாடகையில் ரூபா. 521,000 தொகை 03 வருடங்களுக்கும் மேலாக அறவிடப்படாத நிலையில் இருந்தது.

### 2.2.5 ஏனைய வருமானங்கள்

சபைக்கு சொந்தமான நீர் அலகுகளிலிருந்து விநியோகிக்கப்படும் நீருக்காக ரூபா 786,255 தொகையான நிலுவைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 107,168 தொகையான பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணமும் ரூபா 2,474,577 ஆன முத்திரைக் கட்டணங்களும் இருந்தன.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது உபயோக சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நல விவகாரங்கள், வசதிகள் மற்றும் நலன்கள் போன்ற சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

-----------------------

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் பிரதேச சபையால் உப விதிகள் விதித்து உரிய சேவைகளை பொதுமக்களுக்காக நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 03 விடயங்களுக்கு மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) எதிர்பார்த்த நிறைவு மட்டத்தினை எய்தாமை**

-------------------------------------------------------------------------------------

ரூபா. 6,565,000 மதிப்பீட்டு நிதிஏற்பாட்டினைக் கொண்டு 36 பாதைகளுக்கு குருணிக்கல் நிரப்புவதற்கும் ரூபா. 250,000 இனால் 06 பாதைகளுக்கு கொங்கிரீட் இட்டு செப்பனிடுவதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதும் திட்டமிட்ட 03 பாதைகளுக்கும் அதற்கு மேலதிகமாக 12 பாதைகளுக்கும் குருணிக்கல் நிரப்பப்பட்டிருந்ததுடன், ஒரு பாதைக்கு மாத்திரம் கொங்ரீட் இடப்பட்டிருந்தது.

**(இ) கைவிடப்பட்டிருந்த செயற்பாடுகள்**

-----------------------------------------------------------------

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு கழிவறை உபகரணங்கள் பகிர்ந்தளிக்கும் திட்டம் செயற்படுத்தப்படாதிருந்ததுடன், நீர் வழங்கல் மற்றும் ஏனைய உபயோக சேவைகளின் கீழ் ரூபா. 10 மில்லியன் பெறுமதியான 8 செயற்திட்டங்களும் ரூபா. 2.5 மில்லியன் பெறுமதியான 03 செயற்திட்டங்களும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை

**(ஈ) சுற்றாடல் பிரச்சினைகள்**

---------------------------------------------

பிரதேசத்தின் இயற்கைச் சூழலைப் பாதுகாப்பது சபையின் செயற்பணிகளில் ஒரு பகுதியாக இருந்த போதும், களப்பு கரையைப் பாதுகாத்தல், அபிவிருத்தி செய்தல், அதன் மீன் வளத்தினை அதிகரித்தல் மற்றும் அதனூடாக பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தல் என்பவற்றுக்காக சபையினால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

--------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையினால் நாளாந்தம் சுமார் 5 தொன் கழிவு ஒன்று சேர்க்கப்படுவதுடன், அதன் ஒரு சிறு பகுதியினால் கொம்போஸ்ட் உரம் தயாரிக்கப்படுவதுடன் மீதமுள்ள சகல கழிவுகளும் சுற்றாடலுக்கு அகற்றப்பட்டு மண் இடுகின்ற வழமை பின்பற்றப்பட்டு வந்தது.

(ii) கழிவு ஒன்றுசேர்க்கப்படும் இடங்களில் சேர்கின்ற ஆபத்தான கழிவுகள், இலத்திரனியல் கழிவுகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் ஆகியவற்றை அகற்றுவதற்கான முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ரூபா. 3,807,268 செலவில் நிறைவு செய்யப்பட்டிருந்த கொம்போஸ்ட் தாங்கியின் வேலைகளுக்காக போதிய எண்ணிக்கையான ஊழியர்கள் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

''நிலைபேறான அபிவிருத்தி 2030 நிகழ்ச்சி நிரல்'' இற்குரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்குரிய ஆரம்ப கட்டமாக 10 வெவ்வேறு செயற்பாடுகள் தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. தேவையான மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்கள் உட்பட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்குகளையும் அளவிடுவதற்காக சபை உரிய குறிகாட்டிகளை இனங்காணாமல் இருந்ததுடன் இந்நோக்கங்களை அடைந்துகொள்வது தொடர்பாக அக்கரை செலுத்தும் தரப்பினர் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) சபையினால் பராமரிக்கப்படுகின்ற நீர் செயற்திட்டத்திற்குச் சொந்தமான சகல பாவனையாளர் இணைப்புகளுக்கும் நீர் மானிகள் பொருத்தப்படாதிருந்ததன் காரணமாக சபை பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த குறிப்பிடத்தக்க வருமானத்தை இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஏக்கர் வரி வருமான ஆவணம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் பயன்படுத்தப்படுகின்ற காணி மற்றும் கட்டிடங்கள் சட்டரீதியான முறையில் சபைக்கு உள்வாங்கப்பட்டிருக்காததன் காரணமாக நிலுவை கடை வாடகை போன்றவைகளை அறவிட்டுக்கொள்வதற்கான சட்டரீதியான நடவடிக்கை எடுக்க முடியாது போயிருந்தது.

### 3.3 மனித வள முகாமைத்துவம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் பதவியணி தரத்திலான உத்தியோகத்தரொருவர் மிகையாக இருந்ததுடன் வருமான பரிசோதகர் பதவியொன்று வெற்றிடமாக இருந்தது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமை

சபைக்குரிய 75 கிணறுகள் முறையாக பராமரிக்கப்படாமை காரணமாக அழிவுற்றிருந்தது.

#### 3.4.2 பயன்படுத்தப்படாத/குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா. 630,000 கூட்டுப் பெறுமதியான 02 டிரக்டர்கள், ஒரு நீர் பவுசர் மற்றும் பெறுமதி வெளியிடப்படாத ஒரு டிரக்டர் ஆகியன 02 வருடங்களுக்கும் மேலாக பயன்படுத்தப்படாது காணப்பட்டன.

(ஆ) ரூபா. 600,000 பெறுமதியான மின் மோட்டர்கள், நீர் பம்பிகள், டீசல் என்ஜின் இயந்திரங்கள் ஆகிய நீர் பம்பி நிலைய உபகரணங்கள் 04 தொடக்கம் 07 வருடங்கள் செயலற்றுக் காணப்பட்டன.

(இ) சபைக்குச் சொந்தமான ரூபா. 7,967,144 பெறுமதியான பார உருளிகள் மீளாய்வாண்டில் 80.5 மீற்றர் மணித்தியாலங்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அக்காலப்பகுதியில் ஈட்டப்பட்டிருந்த ரூபா. 71,720 வருமானத்துடன் ஒப்பாக ரூபா. 137,067 செலவிடப்பட்டிருந்தது.

### 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

ரூபா. 70,515 பெறுமதியான வாசிகசாலைப் புத்தகத் இருப்பொன்று தொகை மதிப்பீட்டிற்காக சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் ரூபா. 71,885 பெறுமதியான இரவல் வழங்கப்பட்டிருந்த வாசிகசாலைப் புத்தகங்கள் மீளப் பெறப்பட்டிருக்கவில்லை.

### 3.6 வாகனப் பயன்பாடு

சபைக்குச் சொந்தமாக 03 உழவு இயந்திரங்கள் மீளாய்வாண்டின் போது 723 மீற்றர் மணித்தியாலங்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மதிப்பிடப்பட்ட மொத்த மீண்டெழும் செலவினங்களில் 21 சதவீதம் மற்றும் மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவினங்களில் 73 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தன.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டில் சபையின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு பரிசோதனையொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக மேலும் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | (i) புதிய வீதவரி மதிப்பீடு மற்றும் மேம்படுத்தலுக்காக மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்படாமை. |
| | (ii) ஏக்கர் வரி பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை |

| | | | |
|---|---|---|---|
| | | (iii) | வியாபார அனுமதிப்பதிரங்கள் கணிப்பீடு முறையாக மேற்கொள்ளப்படாமை |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) | காணிகளின் உரித்து கையேற்கப்படாமை |
| | | (ii) | சகல சொத்துக்களும் பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படாமை |
| (இ) | கழிவுப்பொருள் முகாமைத்துவம் | (i) | கழிவு மீள்சுழற்சி பிரிவு செயற்படுத்தப்படாமை |
| | | (ii) | சுற்றாலுக்கு சாதகமான கழிவுப்பொருள் வெளியேற்றப்படாமை |
| (ஈ) | ஊழியர் கடன் | (i) | ஊழியர் கடன் பதிவேடு நாளதுவரையாக பேணப்படாமை |
| | | (ii) | ஊழியர் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை |